# இஸ்லாமியர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் முதலில் களத்தில் வருவது தி.மு.க.தான்!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்

# காதர் மொய்தீன் விஜய் ரசிகர் மன்றத் தலைவர் போல் செயல்படுகிறார்!

### தி.மு.க. அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா காட்டமான பதில்!

சென்னை, ஜூன் 6–

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொகிதீன், விஜய் ரசிகர் மன்றத் தலைவர் போல் செயல்படுவது இஸ்லாமியர்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளதாக, தி.மு.க. அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா தெரிவித்துள்ளார்.



தி.மு.க. அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா, சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, இஸ்லாமியர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் முதலில் களத்திற்கு வருவது தி.மு.க.தான் என்று கூறினார். காதர் மொகிதீனுக்கு தகைசால் தமிழர் விருதினை வழங்கி கௌரவப்படுத்தியது தி.மு.க. தான் என்றும் தெரிவித்தார்.

ஆனால், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொகிதீன், விஜய் ரசிகர் மன்றத் தலைவர் போல் செயல்படுவது இஸ்லாமியர்களிடையே வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும், IUML தான் தவெகவோடு இருக்கிறது; ஆனால் இஸ்லாமிய மக்கள் தி.மு.க. பக்கம்தான் இருக்கிறார்கள் என்றும் எம்.எம்.அப்துல்லா உறுதிப்பட தெரிவித்தார்.

பக்ரீத் திருநாளுக்கு மாடு வெட்டுவதற்கு நிபந்தனை விதித்த உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு த.வெ.க.அரசு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்காதது ஏன்? அதுமட்டுமின்றி காதர் மொய்தீனும் எந்த கருத்தும் தெரிவிக்காதது ஏன்?

தமிழ்நாடு சமூக நீதி முற்போக்கு கூட்டணி என புதிதாக பெயர் வைத்துள்ள பிரவீன் சக்கரவர்த்தியின் கருத்துக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் என்ன பதில் சொல்ல போகிறது என்றும் அவர் வினவினார்.

**இஸ்லாமியர்கள் வருத்தம்**

இஸ்லாமிய மக்கள் தி.மு.க.வுடன் தான் இருக்கிறார்கள் தமிழ்நாட்டில் நூற்றாண்டுகளாக இஸ்லாமியர்கள் அதிகாரத்தில் உள்ளனர் இஸ்லாமியர்கள் நலனை பாதுகாப்பது தி.மு.க.தான் தேர்தலுக்கு முன்பாகவே அவர் சென்றிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் நூற்றாண்டுகளாக இஸ்லாமியர்கள் அதிகாரத்தில் உள்ளனர். மற்ற மாநிலங்களிலும், ஒன்றியத்திலும் ஐயூஎம் எல் அதிகாரத்தில் இருந்துள்ளது. நூற்றாண்டு கனவு நிறைவேறியதாக எதை வைத்து காதர் மொகிதீன் சொல்கிறார்.

இஸ்லாமியர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் முதலில் களத்திற்கு வருவது தி.மு.க.தான். மதிக்கத்தக்க தலைவராக இருக்கக் கூடிய காதர் மொய்தீன், விஜய் ரசிகர் மன்ற தலைவராக செயல்படுவது வருத்தம் அளிக்கிறது.

ஆளுநர் ஆட்சி அமையக்கூடாது உள்ளிட்ட காரணங்களை சொல்லி முதலில் ஆதரவு அளித்தார்கள்; பிறகு அமைச்சரவையில் இடம் பெற்றார்கள்.

த.வெ.க. அமைச்சரவையில் பங்கேற்பதற்காக காதர்மொய்தீன் போன்றோர், போலியான பல காரணங்களை சொல்கிறார்கள் முஸ்லிம் லீக் தான் த.வெ.க.வோடு இருக்கிறது; இஸ்லாமியர்கள் தி.மு.க.வோடு தான் இருக்கிறார்கள். தி.மு.க.வோடு நேற்று இருந்தோம் இன்றும் இருக்கிறோம் நாளையும் இருப்போம் என காதர் மொய்தீன் சொல்லியிருந்தார்; ஆனால் 10 நாட்களுக்குள் என்ன நடந்தது?

த.வெ.க. என்பது பா.ஜ.க.வால் உருவாக்கப்பட்ட கட்சிதான்.

இவ்வாறு அவர் பேட்டி அளித்தார்.

---

பேராசிரியர் மா.நன்னனின் பணிக்குப் பெருந்துணையாக – தூணாக விளங்கிய

# திருமதி பார்வதி நன்னனின் மறைவு - ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

**சென்னை, ஜீன் 6 –**

**“பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் தொடங்கிவைத்த பணிகளை, இன்றளவும் தொய்வில்லாமல் தொடர்ந்து வரும் அவரது குடும்பத்தினரின் பணி போற்றுதலுக்குரியது. அந்தப் பணிக்குப் பெருந்துணையாக, தூணாக விளங்கிய திருமதி பார்வதி நன்னன் அவர்களது மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்” என்று, கழகத் தலைவர் அவர்கள், வலைதளத்தில் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**



கழகத் தலைவர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழுணர்வும் திராவிட இயக்கப் பற்றும் கொண்டு பெரியாரியப் பாதையில் வாழ்ந்து, நம் உள்ளங்களில் நிறைந்து வாழும் பேராசிரியர் மா.நன்னன் அவர்களது வாழ்விணையர் திருமதி பார்வதி நன்னன் அவர்கள் மறைந்த துயர்மிகு செய்தி சொல்லொண்ணா வேதனையைத் தருகிறது. அவரது மறைவிற்கு நேரில் சென்று இரங்கலைத் தெரிவித்து, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலைத் தெரிவித்தேன்.

தமிழுக்கும் திராவிட இயக்கத்திற்கும் பெருந்தொண்டாற்றிய பேராசிரியர் மா.நன்னன் அவர்களது நூல்களைக் கடந்த 2023ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்தபோது நாட்டுடைமையாக்கி, அதற்கான நூலுரிமைத் தொகையை வழங்கியபோது, பேராசிரியர் நன்னன் அவர்களது நினைவலைகளைப் பகிர்ந்துகொண்டு அவரோடு உரையாடிய தருணத்தை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் தொடங்கி வைத்த பணிகளை, இன்றளவும் தொய்வில்லாமல் தொடர்ந்து வரும் அவரது குடும்பத்தினரின் பணி போற்றுதலுக்குரியது. அந்தப் பணிக்குப் பெருந் துணையாக – தூணாக விளங்கிய திருமதி பார்வதி நன்னன் அவர்களது மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இந்தப் பேரிழப்பையும் கடந்து, பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் தொடங்கி வைத்த பணிகளை, அவரது குடும்பத்தினர் தொடர்வார்கள்; பேராசிரியர் மா.நன்னன் பார்வதி நன்னன் ஆகியோருக்கு நிச்சயம் புகழ் சேர்ப்பார்கள்.

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ள புதிய கூட்டணியில்

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெயர் சேர்ப்பு!

### மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கண்டனம்!

சென்னை, ஜூன் 6-

காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பிரவீன் சக்கரவர்த்தி, தமிழ்நாடு சமூக நீதி முற்போக்குக் கூட்டணி என தனக்குத்தானே புதிய கூட்டணி பெயர் வைத்துள்ளார். பிரவீன் சக்கரவர்த்தி சூட்டியுள்ள புதிய கூட்டணியின் பெயர் குறித்து காங்கிரஸ் கட்சிக்கே தெரியுமா? என சமூகவலைதளங்களில் கேள்வி எழுந்துள்ளது. மேலும், பிரவீன் சக்கரவர்த்தி சூட்டியுள்ள புதிய கூட்டணியின் பெயர் குறித்து வி.சி.க., ஐ.யூ.எம்.எல், இடதுசாரி கட்சிகளுக்கு தெரியுமா எனவும் நெட்டிசன்கள் கேள்வி எழுப்பியிருந்தனர். இந்நிலையில், மாநிலங்களவை வேட்பாளர் தொடர்பான விவகாரத்தில், காங்கிரசை சேர்ந்த பிரவீண் சக்கரவர்த்திக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம், புதிய கூட்டணியின் சார்பில், தான் மாநிலங்களவை வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருப்பதாகவும், அதில் CPM பெயரையும் குறிப்பிட்டு இருப்பது தவறானது என்றும் விளக்கம் அளித்துள்ளார். கூட்டணி அமைப்பது குறித்தோ, இந்த வேட்பாளருக்கு ஆதரவு கேட்டோ யாரும் தங்களை அணுகவோ, ஆலோசிக்கவோ இல்லை எனவும், தவெக ஆட்சி அமைக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதன் அடிப்படையில் ஆதரவு தெரிவித்துள்ளது என்பது ஏற்கனவே தெளிவாக கூறப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## காங்கிரஸ் அறிவித்த புதிய கூட்டணியில்

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இல்லை - தி.மு.க. கூட்டணியில் தொடர்கிறோம்!

### இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் இரா.முத்தரசன் தகவல்!

சென்னை, ஜூன் 6-

புதிய கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இல்லை முத்தரசன் தி.மு.க. கூட்டணியில் தான் தொடர்கிறோம் இந்திய கம்யூனிஸ்ட் பா.ஜ.க. ஆட்சி வந்துவிடக்கூடாது என்பதற்காகவே, த.வெ.க. வுக்கு ஆதரவு தி.மு.க. கூட்டணி யில்தான் இந்திய கம்யூனிஸ்ட் தொடர்கிறது இரா.முத்தரசன் பிரவீன் சக்கரவர்த்தி பதிவிற்கும், எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை



காங்கிரசை சேர்ந்த ப்ரவீன் சக்கரவர்த்தி குறிப்பிட்டுள்ள புதிய கூட்டணியில் தங்கள் கட்சி இல்லை என, இந்திய கம்யூனிஸ்ட் விளக்கமளித்துள்ளது.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் இரா.முத்தரசன், தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி வந்துவிடக்கூடாது என்பதற்காகவே, த.வெ.க.-வுக்கு வெளியில் இருந்து இந்திய கம்யூனிஸ்ட் ஆதரவு தெரிவித்துள்ளதை குறிப்பிட்டார்.

திமுக கூட்டணியில் தான் இந்திய கம்யூனிஸ்ட் தொடர்கிறது, அந்த நிலை தான் இன்றும் தொடர்வதாகவும் கூறியுள்ளார். திமுக கூட்டணியில்தான் தொடர்வதாக மு. வீரபாண்டியன் ஏற்கனவே தெரிவித்துள்ளதையும் இரா.முத்தரசன் சுட்டிக் காட்டியுள்ளார். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பிரவீன் சக்கரவர்த்தி பதிவிற்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் ப்ரவீன் சக்கரவர்த்தி குறிப்பிட்டுள்ள புதிய கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இல்லை என்றும் இரா.முத்தரசன் மிகத்தெளிவாக தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் மூத்தத்தலைவர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

---

## ம.சேசுராசு தலைமையில்

# மும்பையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

### கழக முன்னணியினர் பங்கேற்றனர்!

மும்பை, ஜூன் 6 -

மும்பை தி.மு.க. சார்பில் தாராவி கலைஞர் மாளிகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாள் விழா மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெற்றது.

பொறுப்புக்குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் வரவேற்புரையாற்றினார்.

பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ பிறந்தநாள் கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார்.

இவ்விழாவில் மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மும்பை பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.இரவிச்சந்திரன், காரை கரு. இரவிந்திரன், திருவள்ளுவர் நற்பணி மன்றம் தலைவர் ந.இராதா கிருஷ்ணன், மனித நேயம் அமைப்பாளர் சங்கர் திராவிட், தமிழ் ஓட்டுநர் சங்க தலைவர் இரா.ரவிரஜினி, ஜி.முத்து, திராவிடர் கழக பொருளாளர் பெரியார் பாலா, துணைத் தலைவர் இ.அந்தோணி, பகுதிச் செயலாளர்கள் இரா. காந்தி, அப்துல் திவான் மைதீன், சேலம் மா.சீனி வாசன், வே.இரவிச் சந்திரன், பி.இராமையா, தி.மு.க. முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் பொய்சர் க.மூர்த்தி, களந்தை சண்முகவேலு, கோ.கருணாநிதி, அன்பில் ரஞ்சன் காளியப்பன், குப்பன், கணேஷ் போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தே.ஸ்டீபன் நன்றியுரை யாற்றினார்.

அலங்கரிக்கப்பட்ட கலைஞரின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. விழா முடிவில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

---

## மின்வெட்டு பிரச்சினையை கண்டுகொள்ளாத த.வெ.க. ஆட்சியில்–

# ஓயாத மின்வெட்டால் - நாள்தோறும் தூக்கத்தை தொலைக்கும் மக்கள்!

### அம்பத்தூரில் – மின்வாரிய அலுவலகம் முற்றுகை!

அம்பத்தூர், ஜூன் 6-

மின்வெட்டு பிரச்சினைக்கு தீர்வு காணாத த.வெ.க. ஆட்சியில் ஓயாத மின்வெட்டால் நாள்தோறும் தூக்கத்தை தொலைக்கும் மக்கள் இரவில் 5 மணி நேர மின்வெட்டை கண்டித்து மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

சென்னையை அடுத்த அம்பத்தூரில் தொடர் மின்வெட்டால் தூக்கத்தை தொலைத்த பொதுமக்கள், மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது.

த.வெ.க. ஆட்சி அமைந்து இன்னும்மூன்று வாரங்கள் கூட முடியவில்லை. அதற்குள் நாளொரு மேனியாக புதுப் புது பிரச்சினைகள் தமிழ்நாட்டில் அரங்கேறி வருகின்றன.

ஒரு புறம் தமிழ்நாட்டில் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை சம்பவங்கள் மூலம் சட்டம், ஒழுங்கு சந்தி சிரிக்கும் நிலையில், மறுபுறம் ஓயாத மின்வெட்டால் மக்கள் தூக்கத்தை தொலைத்து வருகின்றனர். அம்பத்தூரில் தினமும் இரவில் அரங்கேறும் மின்வெட்டால் பொதுமக்கள் கடும் அவதியடைந்துள்ளனர்.

எஸ்.வி.நகர், கள்ளிக்குப்பம், மாதனாங்குப்பம், பானு நகர், புதூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் நேற்று முன்தினம் இரவு தொடர்ந்து 5 மணி நேரத்திற்கு மேலாக மின்வெட்டால் வெகுண்டு எழுந்த மக்கள் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது, ஆவேசமடைந்த பெண் ஒருவர், கடந்த தி.மு.க. ஆட்சியில் மின்வெட்டு பிரச்சினையே இல்லாத நிலையில், த.வெ.க. ஆட்சி அமைந்த இரண்டு வாரங்களில்தான் மின்வெட்டு தலைதூக்கியுள்ளதாக குற்றம் சாட்டினார்.

---



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த தினத்தை முன்னிட்டு சைதை 139 வது வட்டம் ஜாபர்கான்பேட்டை கெங்கையம்மன் கோயில் அருகில் உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதிச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மின்னல் கடந்தப்பன், ப.சுப்பிரமணி, எம்.எல். ஹரிபாபு, டி. என். சிவமணி, வி. பி. ஜானகிராமன், ஆர். ரமேஷ், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், எம். நாகா, ஆர். கிருஷ்ணகுமார், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், அ. அயத்பாஷா, மா.ஏழுமலை, பூபதி வெங்க டேண், பி. எஸ். பிரகாஷ், சுமதி தீனதயாளன், சி.டி.காசிநாதன், து. முரளி, அ. சுப்பிரமணி, யமஹா காளியப்பன், நியூ காலனி சம்பத், வி. பி. சிவக்குமார், ஜிம் பிரபு, இரா.சத்யா, இன்ஜினியர் வெங்கடேசன், மங்கையர் திலகம், ப.திலீப்பன், பாபு எல்லப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி 58அ வட்டத்தில் நடைபெற்ற விழாவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு கழக கொடியேற்றி இனிப்பு மற்றும் மதிய உணவு வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில் பகுதி கழக செயலாளர் வி சுதாகர் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன் 58வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரிஸ்ரீதர் மற்றும் பகுதி/ வட்ட கழக நிர்வாகிகள் B L A 2 ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.